


மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (15.11.2024) சென்னை, தேனாம்பேட்டை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநரகத்தில், திருநெல்வேலி மாவட்டம்–கல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள மாதிரி ஊரக சுகாதார ஆராய்ச்சி மையம், கடந்த 5 ஆண்டுகளாக தேசிய அளவில் மிக சிறப்பாக ஆராய்ச்சி செய்ததற்காக சிறந்த நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டு புதுடெல்லி இந்திய சுகாதார ஆராய்ச்சி துறை விருது வழங்கப்பட்டுள்ளது. அதனை அமைச்சர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வில் தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் மரு.அருண் தம்புராஜ், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.செல்வவிநாயகம், கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.



தருமபுரியில் நடைபெற்ற ஒருங்கிணைந்த தருமபுரி மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு ஆலோசனைக்கூட்டத்தில் உயர் கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பங்கேற்று ஆலோசனைகள் வழங்கினார். உடன் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ. சுப்ரமணி,தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி,ஆதிதிராவிடர் நலக்குழு மாநில துணை செயலாளர் ராஜேந்திரன்,மாநில வர்த்தக அணி துணை செயலாளர் சத்தியமூர்த்தி மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலக்குழு உறுப்பினர் பி.எஸ்.சரவணன்,மாநில கைம்பெண் நலவாரிய உறுப்பினர் ரேணுகாதேவி, ஒன்றிய செயலாளர்கள் இல.கிருஷ்ணன்,ஏரியூர்.செல்வராஜ், மற்றும் மாவட்ட அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

### மகாராஷ்டிராவிலிருந்து

# அனைத்துத் தொழில்களும் குஜராத்திற்கு மாற்றம்!

## ஒன்றிய அரசு மீது மல்லிகார்ஜுன கார்கே குற்றச்சாட்டு!

மும்பை, நவ.16-

மகாராஷ்டிராவில் இருந்து அனைத்து தொழில்களையும் ஒன்றிய பா.ஜ.க. அரசு குஜராத்துக்கு மாற்றுவதாக காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே குற்றம்சாட்டியுள்ளார்.

மகாராஷ்டிர சட்டப்பேரவை தேர்தலையொட்டி புனேவில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே கலந்துகொண்டு பிரச்சாரம் மேற்கொண்டார்.

அப்போது, பேசிய கார்கே, ஒன்றிய பாஜக அரசு, மகாராஷ்டிராவில் இருந்த அனைத்து தொழில்களையும், குஜராத்திற்கு மாற்றுவதாகவும், இதனால் மகாராஷ்டிராவில் பெரும் பொருளாதார



இழப்பு, வேலையின்மையை ஏற்படுவதாக குற்றம் சாட்டினார்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் சோயாபீனுக்கு குவிண்டாலுக்கு 7 ரூபாய் வழங்கப்படும் என உறுதியளித்தார். நாடாளுமன்ற தேர்தலில் 400க்கும் மேற்பட்ட இடங்களில் பாஜக வெல்லும் என கூறுகிறார்கள்.

தற்போது அக்கட்சி 2 ஊன்றுகோலைச் சார்ந்துள்ளதாக விமர்சித்தார்.

பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் மூடப்பட்டு விற்பனை செய்யப்பட்டதால் கடந்த 10 ஆண்டுகளில் 5 லட்சம் பேர் வேலை இழந்துள்ளதாக கூறிய கார்கே, மாநிலத்தில் வேலையில்லா திண்டாட்டம் நிலவி வரும் நிலையில் இரண்டரை லட்சம் காலிப்பணியிடங்களை அரசு நிலுவையில் வைத்துள்ளதாகவும் குற்றம்சாட்டினார்.



முதல்வர் – கழக தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரியலூர் மாவட்டத்தில் ஊட்டச்சத்தை உறுதி செய் திட்டத்தை துவக்கி வைத்ததைத் தொடர்ந்து திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் கும்முடிப்பூண்டி தொகுதி கும்முடிப்பூண்டி ஒன்றியம் மற்றும் எல்லாபுரம் ஒன்றியங்களில் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் வழங்கினார். உடன் ஜெ.மூர்த்தி, கே.வி.ஜி. உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, மு.மணிபாலன், ஆ சத்தியவேலு, இரா.அறிவழகன், எஸ்.ராமஜெயம், மு.பாஸ்கரன், வி.பி.ரவிக்குமார், க.சம்பத், எம்.கேசவன், அப்துல்கரீம், அர்ஜீனன், சுப்பிரமணி, எம். ஜெயசந்திரன், மெய்யழகன், டி.கே.முனிவேல், பி.கே.நாராயணசாமி, அன்பழகன் உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.




### வயநாடு பேரழிவை

# தேசியப் பேரிடராக அறிவிக்க ஒன்றிய அரசு மறுப்பதா?

## காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி கண்டனம்

புதுடெல்லி, நவ.16-

வயநாடு பேரழிவை ஏற்படுத்திய நிலச்சரிவுகள் இருந்த போதிலும், அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையாக மோடி தலைமையிலான பா.ஜ.க. ஒன்றிய அதை தேசிய பேரிடராக அறிவிக்க மறுப்பதாக பிரியங்கா காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

வயநாடு மக்களவை தொகுதி காங்கிரஸ் வேட்பாளரும், அக்கட்சி பொதுச்செயலாளருமான பிரியங்கா காந்தி வெளியிட் டுள்ள சமூக வலைதளபதிவில், வயநாடு பேரழிவை சீரமைப்பதற்காக கேரள அரசு நிவாரண தொகையை ஒன்றிய அரசு இதுவரை வழங்கவில்லை என குற்றம் சாட்டினார்.

தேவைப்படுபவர்களுக்கு அத்தியாவசிய நிவாரணங்களை மறுக்கிறது, இது வெறும் அலட்சியம் அல்ல, நினைத்துப் பார்க்க முடியாத இழப்பை சந்தித்தவர்களுக்கு ஒரு அதிர்ச்சியூட்டும் அநீதி என கடுமையாக விமர்சித்துள்ளார். வயநாடு பேரழிவை நேரில் பார்வையிட்ட போதும் பிரதமர் மோடி,



அரசியல் காழ்ப்புணர்ச்சியால், கேரள அரசுக்கு பேரிடர் நிவாரணம் வழங்க மறுப்பதாக குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதேபோல இமாச்சலப் பிரதேச மக்களுக்கும் உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை என சாடினார். இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது, இதுபோன்ற பேரிடர் பாதிப்புகள் கடந்த காலங்களில் ஒருபோதும் அரசியலாக பார்க்கப்படவில்லை என்றும் பிரியங்கா காந்தி தெரிவித்துள்ளார்.

வயநாடு நிலச்சரிவு விபத்தை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என, கேரளாவுக்கு ஒன்றிய அரசு கடிதம் எழுதியுள்ளது. ஒன்றிய அரசின் இந்த நடவடிக்கை மனிதாபிமானமற்ற செயல் என்று கேரள அமைச்சர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

**கேரள அமைச்சர் கண்டனம்**

வயநாடு நிலச்சரிவு விபத்தை தேசிய பேரிடராக அறிவிக்க முடியாது என்று கேரளா அரசுக்கு ஒன்றிய அரசு கடிதம் எழுதி உள்ளது.

வீடுகளை இழந்த பொது மக்களுக்கு இழப்பீடு வழங்கவும், புனரமைப்பு திட்டங்களுக்கும் 3 ஆயிரம் கோடி ரூபாய் வழங்க வேண்டும் என்று கேரளா அரசு கோரியிருந்தது. ஆனால், எந்த தொகையும் இதுவரையும் வழங்கப்படவில்லை. ஆண்டு தோறும் மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் மாநில பேரிடர் நிதியிலுள்ள 390 கோடி ரூபாயை வயநாடு பேரிடருக்கு பயன்படுத்தும்படி கடிதத்தில் ஒன்றிய அரசு கூறியுள்ளது.

இதற்கு வருவாய் துறை அமைச்சர் ராஜு கடும் எதிர்ப்பு கூறியுள்ளார். ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பு மனிதாபிமானமற்ற செயல் என்று தெரிவித்துள்ளார்.

வயநாடு விபத்தை அதி தீவிர விபத்து என்று L3 பிரில் கூட சேர்க்க மறுப்பதாகவும், கேரள மக்களுக்கு எதிராக ஒன்றிய அரசு சவால் விடுவதாக கூறியுள்ளார்.

இதனிடையே, வயநாட்டுக்குப் பிறகு மழை, புயல் பாதிப்பு ஏற்பட்ட ஆந்திராவுக்கு சிறப்பு நிதி வழங்கிய பாஜக அரசு கேரளாவுக்கு ஏன் வழங்கவில்லை? என்று காங்கிரஸ் கேள்வி எழுப்பியுள்ளது. ஒன்றிய அரசின் இந்தப் புறக்கணிப்புக்கு எதிராக தீவிர போராட்டம் நடத்தப்படும் என்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் கே.சி. வேணுகோபால் தெரிவித்துள்ளார்.

### திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை! திருவள்ளூர் மேற்கு மாவட்ட

# நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஜி.சிவகுமார் இல்லத் திருமண வரவேற்பு!

## அமைச்சர்கள் ஆர்.காந்தி – ஆவடி சா.மு.நாசர் மற்றும் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. வாழ்த்து!

திருவள்ளூர், நவ. 16 -

திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஜி. சிவகுமார் இல்லத் திருமண வரவேற்பு விழா இன்று (16.11.2024 சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கு, பொதட்டூர்பேட்டை, திருத்தணி ரோடு, ஸ்ரீ அம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் பி.ஜி. சிவக்குமார் வரவேற்புரை ஆற்றுகிறார்.

பொதட்டூர்பேட்டை பேரூர் செயலாளர் டி.ஆர். கே.பாபு, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி.எம்.சுகுமார், மாவட்ட பிரதிநிதி ஜெ.எம். சங்கரன், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் இ.கே.உதயசூரியன், மாவட்டப் பிரதிநிதி ஜெ.டி.சஞ்சய் காந்தி, முன்னாள் பகுதிச் ஒன்றியச் செயலாளர் பி.ரவிந்திரநாத் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் கழக கொள்கை பரப்புச் செயலாளர், முன்னாள் ஒன்றிய இணை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், இராணிப்பேட்டை மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் ஆர்.காந்தி ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

இவ்விழாவில் அன்பகம் கலை, வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ, இ.எஸ்.எஸ். இராமன், திருத்தணி எம். பூபதி, ஓ.ஏ.நாகலிங்கம், கே.ஜி.வி.உமா மகேஸ்வரி, டி.அன்பழகன், ஆர். வினோத் காந்தி, கே.திராவிடபக்தன், வி.சி.ஆர்.குமரன், பா.சிட்டிபாபு,



ராஜேஸ்வரி ரவிந்த்ரநாத், மிதுன் சக்கரவர்த்தி, கிஷோர் ரெட்டி, உதயமலர் பொன்பாண்டியன், ஜெயபால், பொன்.சு. பாரதி, எஸ்.ஆர்.செங்குட்டுவன், சி.எம்.இரவி, கே.எம்.சுப்பிர மணி, ஸ்ரீதர், மு.நாகன், கே.எஸ்.அசோக்குமார், ஜி.ரவீந்திரா, பா.ஆர்த்தி ரவி, என்.கே.கிருஷ்ணன், பி.பழனி, சி.என்.சண்முகம், ஜி.ஜெ.சீனிவாசன், பி.டி.சந்திரன், கூளூர் ராஜேந்திரன், சி.சு.ரவிச்சந்திரன், எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், அன்பரசு, வி.வினோத்குமார், சி.ஜெ.செந்தில்குமார் மற்றும் கழக அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

பி.எஸ்.மேகவர்ணம், பி.எஸ்.சதீஷ்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.



தாம்பரம் மாநகராட்சி, பம்மல்,வார்டு 5 மற்றும் 16வது வார்டில் புதிய சாலை அமைத்தல்,புதிய கால்வாய், கல்வெட்டு,கால்வாய் தூர் எடுப்பது ,சிறு மின்விசை மோட்டார்கள் அதனுடன் கூடிய தண்ணீர் தொட்டிகள்,சுவிட்ச் பாக்சுகள்,RO குடிநீர் பிளான்ட் பழுது நீக்கல், மின் கம்பங்களை அகற்றுவது, எல்.இ.டி.தெரு விளக்குகள் சரி பார்த்தல்,குடிநீர் குழாய்களில் பழுது நீக்கி குடிநீர் வழங்குவது, குப்பைகளை முழுமையாக எடுத்தல்,கொசுமருந்து மற்றும் சுண்ணாம்பு தெளித்தல்,காமராஜபுரம் கிணற்றை சுற்றி சுற்றுசுவர் அமைத்து இரும்பு வலை அமைத்தல் போன்ற பொதுமக்களின் அடிப்படை தேவையான பணிகள் சம்பந்தமாக வீதி வீதியாக சென்று பம்மல் மண்டலம் 1 குழுத் தலைவர் பம்மல் தெற்கு பகுதி செயலாளர் வே.கருணாநிதி ஆய்வு மேற்கொண்டு உடனடியாக பணிகளை முடித்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு வழங்குமாறு அதிகாரிகளை கேட்டுக்கொண்டார். உடன் மண்டல உதவி செயற்பொறியாளர் சத்தியசீலன், சுகாதார அலுவலர் சிவகுமார்,பொதுப்பணி அருணாசலம்,நரேந்திரன், பிட்டர்கள் பக்கிரி,செந்தில், மின் பணியாளர்கள் மகாலிங்கம்,குமார்,ஒப்பந்த சுகாதார பணி பரசுராமன்,வட்ட செயலாளர் அனிஸ்டன், ஸ்ரீதர், கிரி, முனீஸ்வரன், கழக தோழர்கள், பொதுமக்கள உடன் இருந்தனர்.



கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனையின் படி சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்கு பகுதியில் 61–வது வட்டக் கழக செயலாளர் எஸ் டால்பின் அரி தலைமையில், 61 அ வட்டக் கழக செயலாளர் இ மொய்தீன் முன்னிலையில் 61,61அ வட்டம் ஒன்றிணைந்து பாகமுகவர்கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எழும்பூர் தொகுதி மேற்பார்வையாளர் சமூக வலைத்தள மாநிலத் துணைச் செயலாளர் மருத்துவர் யாழினி, மற்றும் எழும்பூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் வி.சுதாகர் கலந்து கொண்டு பாகமுகவர்களுக்கு ஆலோசனை வழங்கினார்கள். இக்கூட்டத்திற்கு தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.எம். நாதன், பொதுக்குழு உறுப்பினர் ஆர். நிர்மலா தேவி,பகுதி அவை தலைவர் எஸ் ரசூல்,பகுதி கழக துணை செயலாளர் மலர்மாறன், பகுதிகளாக மகளிர் துணைச் செயலாளர் அன்னபூரணி,மாவட அமைப்புசாரா மாவட்ட துணை அமைப்பாளர் அ தங்க செல்வம்,தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஜெ அமர்நாத், மற்றும் 61 ,61அ வட்டக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.